சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 4/2021

பெயர். திருமதி. உஷா க /பெ. மனோகரன் நாள் 25.07.2025

**<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) விபத்து சமயத்தில் நான் மாடு வைத்து பால் கறந்தேன். அவ்வாறு மனுவில் சொல்லவில்லை என்றாலும், மனுவிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எத்தனை நபர்கள் சக்கரத்தைக் கழற்றி மாட்டுக் கொண்டிருந்தார்கள் என்றால் வேன் ஓட்டுநர் மட்டும் தான் கழற்றி மாட்டினார். லாரி வேன் மீது மோதியதில் வேன் ஓட்டுநருக்கு அடிப்படவில்லை. மோட்டார் வாகன ஆய்வறிக்கையைத் தாக்கல் செய்தால் விபத்து எவ்வாறு நடந்தது என்று தெரியவரும் என்றால் சரிதான். மதுராந்தகத்தில் சென்னையை நோக்கி செல்லும் புறவழிச்சாலை கீழிருந்து மேல் நோக்கி செல்லும் சாலை என்றால் சரிதான். வேன் நின்ற இடத்தில் சிறிது வெளிச்சம் இருந்தது. நான் வேனிற்கு முன்பு சுமார் 10 அடி தூரம் தள்ளி நின்று கொண்டிருந்தேன்.

2) குற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையைப் பார்த்தால் யார் மீது தவறு என்று தெரியவரும் என்றால் சரிதான். வேன் மீது லாரி மோதியது என்பதற்கு சாட்சியம் ஏதும் இல்லை என்றாலும், நான் கூறியவாறு விபத்து ஏதும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. உண்மையில் வேனுக்கு சேதாரம் ஏற்பட்டிருந்தால் வேனின் உரிமையாளர் நஷ்ட ஈடு கோரியிருப்பார் என்றால் சரியல்ல. நான் சென்னை மியாட் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து கொண்டேன்.

3) நான் அதிக நஷ்ட ஈடு பெறுவதற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யாத காரணத்தினால் லாரி ஓட்டுநர் மீது தவறு என்று கூற முடியாது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் தர கடமைப்பட்டவர் அல்ல என்றாலும், 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.